1979 பிப்ரவரி 13]

திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பித்தல்.

*வினா எண். 29—திரு சி. மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: இதுபற்றிய திட்டம் ஒன்று திருச்சி நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. இது இன்னும் அரசுக்கு வரவில்லை.

மதுரையில் பாதாளப்பாதை அமைப்பு.

*வினா எண் 30—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை பேருந்து நிலையம் அருகே பாதாளப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்போகும் ஒன்றாகும்.

திரு. என். கிட்டப்பா: இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இதைப்போல் மதுரை நகராட்சி மதுரை மாநகராட்சியாக்கப்பட்ட பிறகு அங்கு ஏற்பட்டிருக்கும் போக்கு வரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இன்னும் எவ்வளவு இடங்களில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பெடுத்து இம்மாதிரியான பாலங்களை அமைக்க முன்வருவார்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தத் திட்டமே கூட ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வருகிறது. மதிப்பீட்டுத் தொகை ரூ. 42 லட்சம். மற்றவை பற்றி தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: மதுரைப் பெருநகர் திட்டத்திற்கு உலக வங்கியில் உதவி கிடைப்பதாகத் தெரிகிறது. ஆமெனில் அந்தத் தொகை எவ்வளவு? இந்தப் பாலத்திற்கு அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டதா?

[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மொத்தம் இதையொட்டி ரூ. 144 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது, உலக வங்கியின் உதவியோடு. மற்றவை பற்றிய விவரங்கள் இல்லை.

பரப்பலாறு அணைத் திட்டம்.

*வினா எண் 31—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கான செலவு எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் இப்பொழுது எத்தனை ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது?

(இ) அந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கு இதுவரை ரூ. 1,01,00,137·44 செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தினால் மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பழைய ஆயக்கட்டு 1,323 ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டு 1,000 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 2,323 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளன.

(இ) இல்லை.

சித்தப்பட்டினம் கால்வாய் திட்டம்.

*வினா எண் 32—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மைபாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏரிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் பயன் அடையும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) திட்டம் மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்விலுள்ளது. இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதனை தற்சமயம் கூற இயலாது.

(ஆ) & (இ): இத்திட்டத்தின் மூலம் 12 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும் எனவும் 871 ஏக்கர் நிலங்கள் பயனடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.